DINAMALAR

PAGE NO: 04 DATE: 03.07.2023



# புதுச்சேரி மத்திய பல்கலையில் தேசிய கல்வி கொள்கை பயிலரங்கம்

புதுச்சேரி, ஜூலை 3–

புதுச்சேரி பல்கலைக் கழக மானியகுழுவின் மனிதவள மேம்பாட்டு உயர் பயிற்சி நிறுவனம் சார்பில் பல்கலைக் கழக துறைத் தலைவர்களுக்கான ஒருநாள் தேசிய கல்வி கொள்கை குறித்த பயிலரங்கம் நடந்தது.

அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பாலகுருசாமி பயிலரங்கத்தை துவக்கி வைத்து, பேசுகையில், நாட்டிற்கு தேவையான கல்விக் கொள்கை வெளி வந்துள்ளது.

இதன் மூலம் இந்தியா கல்வி வளர்ச்சி மேம்பாட்டிற்கான பல்வேறு வழிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளன. அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கல்விக் கொள்கை அவசியமாகிறது. கல்வி நிறுவனங்களில் நவீன முறைகள் பயன்படுத் தப்படுவதுடன், ஆசிரியர்களுக்கு குழு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்றார்.




■ புதுச்சேரி பல்கலையில் நடந்த துறைத் தலைவர்களுக்கான ஒருநாள் தேசிய கல்வி கொள்கை குறித்த பயிலரங்கை துணைவேந்தர் குர்மித்சிங் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அருகில், தொழில்நுட்ப பல்கலைக்கழக துணைவேந்தர் மோகன், அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பாலகுருசாமி.

புதுச்சேரி பல்கலைக் கழக துணை வேந்தர் குர்மித் சிங் தலைமை தாங்கி, தேசிய கல்வி கொள்கை, காலத்துக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. தாய் மொழியில் கல்வி கற்கக்கூடிய வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எந்த துறையிலும் திறன் சார்ந்த கல்வி அளிக்க முடியும். அதற்கான முயற்சிகளை பல்கலைக்கழக ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதில், பல்கலைக்கழக பதிவாளர் ரஜினிஷ் பூட்டானி நோக்கவுரை வழங்கினார். தொழில்நுட்ப பல்கலைக்கழக துணை வேந்தர் மோகன் வாழ்த்தி பேசினார். இயக்குனர் ராமலிங்கம் வரவேற்றார். புதுச்சேரி பல்கலைக்கழக இயக்குனர் தரணிக்கரசு சிறப்புரை ஆற்றினார். பேராசிரியர் ராஜிவ் ஜெயின் நன்றி கூறினார்.